Volume 6 Special Issue 1 November 2024 E-ISSN: 2582-2063

# தமிழர்கள் அறிவு சான்ற பொருளாதார நோக்கத்திற்கு கோயில்களை எவ்வாறு பயன்படுத்தினர்?

**முனைவர் ஆர். எஸ். சாந்தி**
*உதவிப்பேராசிரியர், வரலாற்றுத்துறை*
*சீதாலெட்சுமி ஆச்சி மகளிர் கல்லூரி, பள்ளத்தூர், சிவகங்கை மாவட்டம்*

**ஆய்வுச்சுருக்கம்**

*கோயில் இல்லாஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது பழமொழி. கோயிலக்ள் என்பவை நமது கலாச்சாரத்தின், பண்பாட்டின், நாகரீகத்தின், அறிவியல் தொழில் நுட்பத்தின், பொருளாதார மேம்பாட்டின் அடையாளம் என்றால் மிகையாகாது.*

*சுமார் 40,000 கோயில்களை சோழமன்னர்கள் தங்கள் ஆட்சிகாலத்தில் கட்டினார்கள். அன்று உலகிலேயே உயாந்த கட்டிடம் தஞ்ச பெரியகோயிலும், கங்கைகொண்ட சோழபுரமும் தான். சோழர் காலத்தில் தமிழநாடுதான் உலகத்திலேயே மிகவும் பணக்காரநாடு. அப்போது வடஅமெரிக்கா, தென்அமெரிக்கா கிடையாது. இலண்டன், ஒரு சிறுமீன் பிடிகிராமமாக 1066ல் நிறுவப்பட்டது. இம்மன்னர்கள் கல்வி சாலைகள் அமைக்காமல். மருத்துவமனைகள் கட்டாமல் சத்திரங்கள் அமைக்காமல் ஏன் கோயில்களை கட்டினார்கள்? மன்னர்கள் நிலங்களை மானியங்களாக மக்களுக்கு கொடுக்காமல் ஏன் கோயில்களுக்கு தானமாக கொடுத்தனர்?*

*ஏற்றுமதி வாணிபம், வியாபாரம், மூன்று போக சாகுபடி விவசாயம் மூலமாக கிடைத்த (தங்கம்) வருமானத்தை மன்னர்கள் பொருளாதார மேம்பாட்டிற்கு எவ்வாறு கொண்டு சென்றனர்??? ஏன் கற்றளிகளாக கோயில்களை அமைத்தனர்.?*

*இவை அனைத்துக்குமான பதில் நமது மன்னர்களின் (முன்னோாக்ளின்) அறிவு சார்ந்த நோக்கையே காட்டுகிறது.*

***கலைச்சொற்கள்:*** *கற்றளிகள், மானியங்கள், பணவீக்கம், பணவாட்டம், தேக்கம், தன்னிறைவு பெற்ற பொருளாதாரம், கும்பாபிஷேகம், சாவாமூவா பேராடுகள்*

**முன்னுரை**

கோயில் கட்டுமானம் முக்கியத்துவம் பெற்றது ஏன்?: பொருளாதாரம் என்பது ஏற்ற இறக்கம் கொண்டது. பணவீக்கம், பணவாட்டம், தேக்கம் போன்ற பொருளாதார நிலைகள் ஒரு சக்கரம் போன்று மாறி மாறி வரக்கூடியது. அரசின் கடமை என்பது இத்தகைய பொருளாதார ஏற்றதாழ்வுகளில் இருந்து மக்களை காப்பதும், வேலை வாய்பப்ப அளிப்பதும், அனைத்து தரப்பினருக்கும் வாழ்வாதாரத்தை தருவதும் ஆகும். இதற்காக மன்னர்கள் அணைகள் கட்டுவது, கோட்டைகள், அரண்மனைகள் கட்டுவது போன்ற கட்டுமானங்களின் மூலம் பணத்தை மக்களிடம் கொணடுெ சல்ல முடியும்.

அணைகள் கட்டுவது கோட்டைகள், அரண்மனைகள் கட்டுவது என்பது கட்டுமான திறனை மட்டுமே வெளிக்கொணரக் கூடியது. ஒரு சில சமூகத்தினர் மட்டுமே பயன் பெறமுடியும். ஆனால் கோயில்கள் கட்டுவது மட்டுமே பல்வேறு விதமான சமூக மக்கள் மற்றும் பல கலைஞர்களின் திறன்களை வெளிக்கொணரும் கட்டுமானமாக இருக்கும். மக்களுக்கு தொடர்ந்து வாழ்வாதாரம் தரக்கூடிய நலத்திட்டமாகவும், பொருளாதார தன்னிறைவு திட்டமாகவும் இருக்கும் என மன்னர்களால் யோசிக்கபப்ட்ட அறிவு சான்ற திட்டமே கோயில்கள் கட்டுவது.

கோயில் கட்டுமான வேலைகள்: மன்னர்கள் காலத்தில், கோயில் பொருளாதார அமைப்பு பலமாக கட்டமைக்கப்பட்டு இருந்தது. கோயிலை அணடி, பல சமூகங்களை சேர்ந்த பல குடும்பங்கள் இருந்தன. மன்னர்கள் கோயில் கட்ட ஆரம்பித்தவுடன் கட்டுமான பணிக்கு அந்த ஊரை சுற்றி உள்ள கட்டுமான கலைஞர்கள், சிற்ப கலைஞர்கள், கல் தசச்ர்கள், கட்டுமான பொருள்களான செஙக்ல், சுண்ணாம்பு போன்றவற்றை உற்பத்தி செய்வோா் அதை ஓரிடத்தில் இருந்து கோயில் கட்டும் இடத்திற்கு கொண்டு செல்லும் போக்குவரத்து, வர்ணம் அடிக்க, ஓவியக் கலைஞர்கள் இப்படி அனைவருக்கும் வேலை வாய்பப்ு அதுவும் அரசால் கொடுக்கப்படும் அரசு வேலை.

கட்டுமானம் அல்லாத கோயில் வேலைகள்: கோயிலுக்கு மானியமாக வழங்கப்படும் நிலங்கள், குத்தகை மூலமாக விவசாயிகளுக்கு விடப்பட்டு, அதன் மூலம் விவசாய உற்பத்தி, அதற்கு ஒரு சமூகம், பண்ட மாற்று முறையில் தன்னிறைவு பெற்ற பொருளாதாரம்.

**தேங்காய், தானியங்கள் வழங்க ஒரு சமூகம்**

கோயிலுக்கு தானமாக கொடுக்கப்பட்ட பசு மாடுகள், பசு மடம் அதை கவனித்தல், அதற்கு ஒரு சமூகம். அதனால் கோயிலுக்கும் அநத் கிராமத்தாருக்கும் பால் சார்ந்த பொருடக்ள், நைவேத்தியம் சமைக்க சமையல் கலைஞர்கள், அதற்கு ஒரு சமூகம்.

சமையல் செய்ய பாத்திரங்கள் செய்ய, மண்பானை செய்வோர் மற்றும் உலோக பாத்திரங்கள் செய்வோர், அதற்கு ஒரு சமூகம். அவர்களுக்கு தொடர்நது் வேலை.

நந்தவனம் மூலம் தெய்வத்திற்கு பூ மாலை மற்றும் அலங்கார சேவை செய்ய நந்தவனம் காபபோருக்கு வேலை, அதற்கு ஒரு சமூகம். அவர்களுக்கு தொடர்ந்து வேலை இருக்க கோயில் உற்சவங்கள்.

மங்கள இசை இசைக்கும் கலைஞர்கள் ஒரு சமூகம். கூத்து கலைஞர்கள் என அவர்களுக்கும் வருட மானியம் மற்றும் வேலை, இசை நடனத்திற்கு ஒரு சமூகம், மாலை வேளைகளில் ஆன்மீக கச்சேரி என்று மனதிற்கு இனிய பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள்.

**தெய்வத்தின் வஸ்திரங்கள் நெயய் ஒரு சமூகம்**

அநத் வஸ்திரங்கள் துவைக்க ஒரு சமூகம். அவர்களுக்கும் கோயில் மூலம் வருடமானியம் மற்றும் வேலை, கோயிலை சுத்தமாக வைத்துக் கொள்ள, அலங்கரிக்க, கோலமிட ஒரு தேவை. ஆதை செய்ய ஒரு சமூகம். அவர்களுக்கும் கோயில் மூலம் வருடமானியம் மற்றும் வேலை, இவை அனைத்தையும் நிர்வாகம் செய்ய கணக்கு பார்க்க ஒரு சமூகம்.

இவர்கள் அனைவரும் அவரவர் வேலையை பார்க்க அதன் மூலம் வாழ்வாதாரம் பெறவும், கோயில் ஒரு மிகப்பெரிய தொழிற்சாலை. ஆன்மீகம் ஒட்டி வாழ்வாதாரம்.

தமிழர்களின் கோயில் சார்ந்த விஞ்ஞான அறிவு: பெரு வெள்ளம் வநது் ஊரே மூழ்கிப் போனாலும் கோயிலின் கோபுரத்தில் உள்ள கலசம் மூலம் செறிந்த விஞ்ஞான அறிவுடன் அதனுள் 12 வருடம் வரை கெடாத அந்த கிராமத்தின் மண்ணுக்கேற் பவிளையும் விளைபொருடக்ளின் விதைபொருட்கள்.

தமிழர்களின் கோயில் சார்ந்த பொருளதார அறிவு: 12 வருடத்திற்கு ஒரு முறை அதை மாற்றி அமைத்து, மராமத்து பணிகள் மேற்கொள்ள, மேற் சொன்ன அனைவருக்கும் ஒரு கூட்டு வேலைவாயப்பு -கும்பாபிஷேகம்.

இப்படி அவர் அவருக்கு தெரிந்த பணி, அதை சார்ந்த சமூகம், ஒன்றிணைந்து தன்னையும் காபப்ாற்றிக் கொண்டு தன்னிறைவு வாழ்க்கை என வாழ்வதற்கென கட்டமைக்கப்பட்டதே, நம் இநது்க் கோயில்கள்.

**ஊருக்கு ஒரு கோயில், அதை சுற்றிலும் அனைத்து சமூகம்**

அந்த ஊரைச் சுற்றி உள்ள இயற்கை வளங்கள் பாதுகாக்கப்பட்டு மூலிகை மூலம் வைத்தியம், அதற்கென ஒரு சமூகம் என ஊரைச் சுற்றியே ஒரு தன்னிறைவு வாழ்க்கை. இப்படி அமைக்கப்பட்டது தான் நம் பொருளாதார கட்டமைப்பு.

மாத சம்பளம் பணமாக, பணத்திற்கு பொருள், அதன் விலை ஏற்ற இறக்கம், பணவீக்கம் இவை எதுவுமே சாராமல் ஓர் தன்னிறைவு வாழக்கை.

கோவில்களில் பூஜை செய்வதன் அவசியம்: இப்படி கட்டப்பட்ட கோயில்களில் முறைப்படி பூஜைகள் செய்வது அவசியம் என்பதை உணர்த்தும் திருமூலரின் (திருமந்திரம்) பாடலில்

"முன்னவனார் கோயில் பூஜைகள் முடட்டின் மன்னவர்க்கு தீங்குள் வாரிவளம் குன்றும், கன்னம் களவு மிகுந்திடும் காசினியில் என்னரும் நந்தி எடுத்துரைத்தானே'"

**பொருள்:** ஆலயங்களில் பூஜைகள் செய்யாவிடில் மன்னனுக்கு தீங்கு விளையும், மழைவளம் குன்றும், நோய்கள் பரவும், கன்னம், களவு கொள்ளைகள் மிகுந்துவிடும் என்று நந்தி எடுத்துரைத்தார், எனவே தான் தெய்வங்களுக்கு உயிரூட்டி அந்த் தெய்வங்கள் அங்கே வாழ்வதாகவும், அந்த் கோயிலின் சொத்துக்கள் அந்த தெய்வங்களின் சொத்துக்கள் என்றும், உயிருள்ள ஒருவர் எப்படி தினமும் குளிப்பாரோ, உடை உடுத்தி கொள்வாரோ, தினமும் உணவு உண்பாரோ, நம் வாழ்வாதாரத்திற்கு உதவும் ஒருவரை நாம் எப்படி போற்றி கவனிப்போமோ, அப்படி அவருக்கு நன்றி செலுத்தும் விதமாக அனைவரின் சார்பாக ஆகம முறைப்படி பூஜை புனஸ்காரங்கள் கவனிக்க தகுதியான ஆச்சார்யர்கள் என ஒரு சமூகம்.

கோவில் வருமானத்திற்கு செய்யப்பட்ட ஏற்பாடுகள்: இவர்கள் அனைவருக்கும் ஊதியம் வழங்க மன்னர்களும், செல்வந்தாக்ளும் நிலங்கள், பொருள்களை கோவிலுக்கு தானமாக வழங்கினர். இநநிலங்கள் குத்தகைக்கு விடப்பட்டு கோயிலுக்கு வருவாய் உறுதி செய்யப்பட்டது. இவை பற்றிய கல்வெட்டுக்களும், தாமிரப்பட்டயங்களும் உள்ளன. அவற்றில் காணபப்டும் சில செய்திகள்:

- கோயீலில் அமைக்கப்படும் நந்தவனமானது மலர் சாகுபடி செய்யும் சமூகத்தினருக்கு குத்தகைக்கு விடப்படும், அவர்கள் தினந்தோறும் குறிப்பிட்ட அளவு பூக்களையும் மாலைகளையும் கோயிலுக்கு வழங்கியது போகமீதி பூக்களை அவர்களே விற்றுக் கொள்ளலாம்.
- இனாமாக வழங்கிய நிலங்கள் தானியவிளைச் சலுக்கு விடப்பட்டன. குத்தகைதாரர் தானிய விளைச்சலில் ஒரு பகுதியை கேயீலுக்கு வழங்கி வரவேண்டும். இதுவே கோயிலின் முக்கிய வருமானமாகும்.
- எள், ஆமணக்கு போன்ற எண்ணெய் வித்துக்களை விளைவிக்கும் குத்தகைதாரர் குறிப்பிட்டளவு எண்ணெயை கோயிலுக்கு வழங்கி வரவேண்டும். இது தீப்பநத்ஙக்ள், விளக்குகள் எரிப்பதற்கு பயன்படுத்தப்பட்டது.

இடையர் சமூகத்தவர்களிடம், குறிப்பிட்ட எண்ணிக்கையில் ஆடுகள், பசுக்கள் வழஙகப்பட்டன. இவை சாவா மூவா பேராடுக்ள் (கோயில் ஆடுகள்), சாவா மூவா பெரும் பசுக்கள், (கோயில் பசுக்கள்) என்று அழைக்கப்பட்டன. சாவு மூபப் ஏற்பட்டால் இடையர்கள், அவற்றிற்குப் பதிலாக வேறு ஆடுகள், பசுக்கள் தர வேண்டும். இதனால் சாவா மூவா பேராடுகள், சாவா மூவா பசுக்கள் குறிப்பிட்ட எண்ணிக்கையிலேயே இருந்து வந்தன. இடையர்கள் சாவா மூவா பேராடுகள், பசுக்கள் மூலம் குறிப்பிட்ட அளவு பால், தயிர், நெய் நாள்தோறும், மாதந்தோறும் கோயிலுக்கு வழங்கி வருதல் வேண்டும்.

இவவித ஏற்பாடுகளால் மன்னர்கள் காலத்தில் கோயில்களில் பூஜை முறைகள் தங்கு தடையின்றிதொடரவும், கோயில் சார்ந்தோரின் பிழைப்பிற்கும் வழி வகை செய்திருந்தனர்.

இப்படி ஒரு கோயிலை வைத்து ஆன்மீகம் மூலமாக ஒரு தன்னிறைவு பொருளாதாரத்தை உலகிற்கு வாழந்து காட்டிய நாடு நமது பாரதம்.

கருவூலமாக செயல்பட்ட கோவில்கள்: இவை மட்டுமா கோயில்கள் கட்டுவதற்கான காரணம் ?? கோயில்கள் மன்னர்களின் கருவூலமாகவும் திகழ்ந்துள்ளன. இதற்கு நல்ல உதாரணம் பத்மநாபபுரம் கோயில், திருவனந்தபுரம். இங்கிருந்த கருவறைக்கு அடுத்தபடியாக இருந்த அறைகள் கருவூலமாக பயன்படுத்தப்பட்டு வநதுள்ளதை அங்கு கண்டறியப்பட்ட மதிப்பிட முடியாத பொக்கிஷங்கள் நிரூபிக்கின்றன.

தானிய கிடங்குகளாகவும், மருத்துவமனைகளாகவும் செயல்பட்ட கோவில்கள்: பஞ்சகாலத்தில் மக்களுக்கு உதவுவதற்கான தானியக் கிடங்குகளும் கோயிலுக்குள் அமைக்கப்பட்டிருந்தன. மருத்துவமனையாகவும், போர்க் காலங்களில் படை வீரர்கள் தங்கக் கூடிய இடமாகவும் கோயில்கள் பயன்பட்டன.

கல்வி நிலையங்களாக செயல்பட்ட கோவில்கள்: மேலும்கோயில் பிரகாரங்கள் மற்றும் கோயில்களை ஒட்டித் தான் பள்ளி கல்லூரிகள் அமைக்கப்ட்டன. இதற்கு உதாரணம் வீர ராஜேந்திரன் காலத்தில் 1067ல் திருமுக்கூடல் கல்வெட்டில், அங்குள்ள விஷ்ணு கோயிலுடன் சேர்நதிருந்த ஒரு பள்ளியை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

நீதிமன்றங்களாக கோவில்கள்: நீதி மன்றங்களாகவும், வரலாற்று ஆதாரங்களை பாதுகாத்து வைக்கும் பெட்டகங்களாகவும் கோயில்கள் பயன்பட்டுள்ளன. இதற்கு உதாரணம் சில மாதங்களுக்கு முன் வெளிவந்த தினமலர் செய்தியில் (ஜுன் 22, 2023) கரூர், குளித்தலை அருகே சிவாயம் சிவபுரீஸவ்ரர் கோயில், ராஜகோபுரத்தில் 29,000 சுருளை ஏடுகள் கண்டறியப்பட்டதும் அதில் ஏராளமான நில ஆவணங்களும், வரலாற்றுத் தகவல்களும் மேலும் இக்கோயிலின் தேவஸ்தானம் நீதிமன்றமாக செயல்பட்டுள்ளதும் தெரிய வருகிறது.

தமிழர்களின் அறிவியல் தொழில்நுட்பத்திறன்: கோயில்கள் தமிழர்களின் அறிவியல் தொழில்நுட்பத் திறனை எடுத்துக்காட்டுவனவாகவும் இருக்கின்றன என்பதற்கு தஞ்சை பெரிய கோயிலையே சிறந்த எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். எவ்வாறெனில் இக்கோயில் கட்டுவதற்கான கருங்கல் வெகுதூரத்தில் உள்ள நார்த்தா மலைபகுதியில் இருந்து எவ்வாறு கொண்டு செல்லப்பட்டது என்பது இன்றளவும் வியப்பிற்குரிய ஒன்றாக உள்ளது. மேலும் இக்கோயிலின் உச்சியில் 216அடி உயரத்தில் வைக்கப்பட்டுள்ள ஒரே கல்லாலான கருங்கல் 81டன் எடையுள்ளது. இது இயந்திரங்கள் வசதி இல்லாத அந்த காலத்தில் எவ்வாறு சாத்தியப்பட்டது என்பது ஒரு வியப்பே

மேலும் இக்கோயில் 1000 வருடம் கடந்தும் இயற்கை சீற்றங்களை தாங்கி நிற்பதைக் கண்டுஇதன் கட்டுமானத்தை பரிசோதித்த யுனெஸ்கோ ஆய்வாளர்கள் வியந்துநின்றனர். காரணம், இதன் அடித்தளத்தில் மணல் நிரப்பப்பட்டு அதன் மேல் இதன் கட்டுமானம் நிறுவப்பட்டுள்ள தன் காரணமாகவே, இது எப்படி தஞ்சாவூர் தலையாட்டி பொம்மை, எப்படி ஆட்டி விட்டாலும், கடைசியில் நிமிர்நது நிற்கிறதோ அதே போன்று இயற்கை சீற்றங்களின் போதும் சேதம் எதுவும் இன்றி நிற்கிறது என்பது தமிழர்களின் அறிவியல் அறிவை எடுத்துக்காட்டுகிறது,

இதே போன்று தான் பாண்டிய மன்னர்களால் கட்டப்பட்ட மதுரை மீனாட்சி அம்மன் கோயில் பல சிறப்புகளுடன் உலக புகழ் பெற்றதாக விளங்குகிறது. நமக்கு அருகில் உள்ள ஆவுடையார் கோயில் சிற்பகலைத் திறனை எடுத்துகாட்டுவதாக உள்ளது.

எழுத்து முறையின் வளர்ச்சி பெட்டகமாக கோவில்கள்: மேலும் கற்கோவில்களின் சுவர்களில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துக்கள் மூலம் எழுத்து முறைகளின் வளர்ச்சியை (தமிழில் வட்டெழுத்து, தமிழி(அ)தமிழ் பிராமி, கிரந்தம) அறிய முடியும். மொத்தத்தில் கோயில்கள் வரலாற்று பெட்டகமாக திகழ்கின்றன என்பது மறுக்க முடியாத கருத்து ஆகும்.

கலைவளர்க்கும் மையமாக கோவில்கள்: கோயில்கள் கலைகளை (ஓவியக்கலை, இசைக்கலை, சிற்பக்கலை, நாடகக்கலை, நடனக்கலை) வளர்க்கும் கலைக் கூடமாகவும் திகழந்துள்ளன, மேலும் கோயில்களில் அடிக்கப்படும் காண்டா மணி ஓசையானது அநத் ஊரின் எதிரம்றை சக்திகளையும், நோய் கிருமிகளையும் அழிக்கும் சக்தி வாயந்தது என்பதும் கூடுதல் நன்மை.

### முடிவுரை

மன்னர்கள் கட்டியகோட்டைகள், அரண்மனைகள் அழிந்திருந்தாலும் கோயில்கள் 1000 வருடங்கள் தாண்டியும் நிலைத்து, நமது மன்னர்களின் (முன்னோாக்ள்) பெருமையையும் தமிழர்களின் அறிவு சான்ற பொருளாதார நோக்கையும் பறை சாற்றிக் கொண்டிருக்கின்றன. இன்று இத்தகைய பெரிய கற்றளிகளை நம்மால் கட்டுவது என்பது இயலாத காரியம். அவற்றை பாதுகாப்போம், பராமரிப்போம்.

### மேற்கோள்கள்


1. Nilakanta Sastri, K. A. (1955). *The Cholas*. University of Madras Press.
2. Tirumalai, R. (1994). *Collected Papers*. Department of Archaeology, Government of Tamil Nadu.
3. Krishnamurthi, S. R. (1986). *A Study on the Culture Developments in the Chola Period*. Annamalai University.
4. Balambal, V. (1998). *Studies in Chola History*. Kalinga Publications.

5. Chithra Madhavan. (2005). *History and Culture of Tamil Nadu*. D.K. Print World.
6. Lakshmi, A. (1994). *Role of Temples in the Social and Economic Life of the Tamils*. International Institute of Tamil Studies.
7. Venkataraman, B. (1985). *Rajarajeswaram - The Pinnacle of Cola Art*. Madras.
8. Senthamarai, C. (2024). Role of temples during the Chola period. *International Journal of Creative Research Thoughts*, *12*(4).
9. Saju, M. T. (2016). How Cholas built efficient economy. *Times of India*.
10. Kavitha, M. (2017). Socio-economic functions of temples during medieval tamil country 11th-16th century A.D. *International Journal of Business and Management Invention*, *6*(7).
11. Appadurai, A., & Breckenridge C. (1976). The south Indian temple: Authority, honour and redistribution. *Contributions to Indian Sociology*, *10*(2).
12. Dayalan, D. (1992). *Early Temples of Tamil Nadu: Their role in Socio-Economic life (A.D 550-925)*. Harman Publishing House.
13. குமாரசாமி, மு. (2023). *சிவபுண்ணியம் பெறுவோம்.*
14. Karashima, N. (1984). *South Indian History and Society - Studies from Inscriptions, A.D. 850–1800*. Oxford University Press.